கவனிக்க.- 2018.06.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2076 - 2018 ජූනි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.06.14

*2076 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 968 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 971 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, யூலை மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூன் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கென இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01. | காவலாளி தரம் III | 01 | PL - 1 - 2016 (இல. 3/2016 பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய) ரூபா 24,250- 10X250-10X270-10X300 - 12X330 ரூபா 36,410 | கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வாறு 02 திறமைச் சித்திகளுடன் குறைந்தது 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**உடற் தகைமைகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நல்ல கண் பார்வையைக் கொண்டுள்ளவராகவும் சிறந்த தேகாரோக்கியத்தையும் நல்ல மனநலம் கொண்டுள்ளவராகவும், நன்னடத்தை உடையவராகவும், தீவின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றக் கூடிய உடல் நலத்தைக் கொண்டுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

கட்டமைப்பான நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் உரிய வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு நடைபெறும்.

எழுத்துப் பரீட்சை : பொருத்தமற்றது
தொழில்சார் பரீட்சை : பொருத்தமற்றது
கட்டமைப்பான தேர்வு :

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | உச்சப் புள்ளிகள் 100 | சித்தியடைவதற்குத் தேவையான அதிகுறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 40 | பொருத்தமற்றது. அதியுயர் புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரி பதவி வெற்றிடத்துக்கெனத் தெரிவு செய்யப் படுவார். |
| அனுபவம் | 55 | |
| நேர்முகத்தேர்வில் காட்டும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

**தேவையான ஏனைய தகைமைகள் :**

1. விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
2. விண்ணப்பதாரிகள் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் 03 வருடகாலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்;
3. சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல உடல்நிலையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

4. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையில் பதவி வகிப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது);
5. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்கள் உரிய பதவிகளுக்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்;
6. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;
7. அரச அல்லது மாகாண அரச சேவை கூட்டுத்தாபனச் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக கற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவோ இருத்தல் கூடாது;
8. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையில் தற்போது சமயோசித, பதிலீட்டு, தற்காலிக அல்லது ஒப்பந்த, தன்னார்வ அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும்.

**சேவை நிபந்தனைகள் :**

1. இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது;

2. விதவைகள் /அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

3. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவார்;

4. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும், நிதிப் பிரமாணங்களுக்கும், மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது அரச திணைக்களங்கள் அல்லது ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக 12' x 8' அளவுள்ள தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, தித்தபஜ்ஜல, வெரல்லகம" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற மற்றும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவை /மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆணைங்களின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்;
2. கல்விச் சான்றிதழ்கள்;
3. சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்;
4. தொழில் தேர்ச்சிகளை உறுதிப்படுத்தும் தேவையான சான்றிதழ்கள்;
5. ஏனைய தகைமைகளையும் அனுபவத்தையும் காட்டும் சான்றிதழ்கள்;
6. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரது சான்றிதழ். (பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திக் கையொப்பமிட்டது);
7. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

இந்த ஆட்சேர்ப்பு வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யும், தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் மற்றும் இவை தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும் அதிகாரம் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

கே. பி. எஸ். டி. பதிரன,
செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை.

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை அலுவலகம்,
தித்தபஜ்ஜல, வெரல்லகம.
2018, மே 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை**

................................................ பதவிக்கான விண்ணப்பப்பம்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ....................................................................................................................

02. அஞ்சல் முகவரி : ....................................................................................................................

03. பிறந்த திகதி : ........................ வருடம் : ........................ மாதம் : ......................... திகதி : ....................

04. விண்ணப்ப இறுதித் திகதி அன்று உள்ளவாறு வயது : ....................................
வருடங்கள் : ..................... மாதங்கள் : ........................... நாட்கள் : .........................

05. பால் : ஆண் /பெண் : .............................................

06. சிவில் அந்தஸ்து விவாகமானவரா?/விவாகமாகாதவரா? : ..............................................

07. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

08. இலங்கைப் பிரசையாயின் வம்சாவளியினாலா ? பதிவினாலா ? : ................................................

09. ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் : .......................................

10. கல்வித் தகைமைகள் :
வருடம் : .................................
க.பொ.த. (சா.த.)ப் பரீட்சை : .......................... சுட்டெண் : ..........................

| தொடர் இல. | பாடம் | தரம் | தொடர் இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11. ஏனைய தகைமைகள் : ....................................................................................................................

12. சேவை அனுபவம் : ....................................................................................................................

13. ஏதேனும் குற்றங்களுக்கென எப்போதாயினும் குற்றவாளியாகக் கருதப்பட்டுத் தண்டனை பெற்றவராயின் அது பற்றிய விபரம் : ...............................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்,

திகதி : ................................

6 - 680

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மன்னார் நகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2017 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆந் திகதி மன்னார் நகர சபையால் கீழ்க்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

சே. லெ. றெனால்ட்,
செயலாளர்,
*மன்னார் நகர சபை.*

*மன்னார் நகர சபை அலுவலகம்,*
*மன்னார்.*

### 149/2017 ஆம் இலக்க 2017.08.18 ஆந் திகதிய தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது விதியின் 1 ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உபபிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2017.02.24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 1 - 6 வரையான வடக்கு மாகாண நகர சபைகளுக்கான நியமத்துணை விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் மன்னார் நகர சபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 வது பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் மன்னார் நகர சபை தீர்மானிக்கின்றது.*

*6 - 606*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.